# 10.ஆம்வகுப்பு–தமிழ்–ஒரு மதிப்பெண் வினாவங்கி(1–11)

## (திருத்தி அமைக்கப்பட்ட பாடப்பகுதிக்கானது)

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து,விடையைக் குறியீட்டுடன் எழுதுக:

**இயல்–3**

1)அறிஞருக்கு நூல்,அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணம்
அ)வேற்றுமை உருபு ஆ)எழுவாய் இ)உவம உருபு ஈ)உரிச்சொல்

2)ஒரு தொடர்மொழியில் இரு சொற்களின் இடையில் வேறுசொல் வேண்டாது பொருள் உணர்த்துவது----
அ)இடைச்சொல் ஆ)தொகைநிலைத்தொடர்
இ)தொகாநிலைத்தொடர் ஈ)வேற்றுமைத்தொகை

3)தொகாநிலைத்தொடர்--------வகைப்படும்.
அ)6 ஆ)9 இ)8 ஈ)10

4)வினைப்பயனிலை தொடர்ந்து வந்த எழுவாய்த் தொடரைக் கண்டுபிடி
அ)எழிலன் ஓவியன்ஆ)நெல் விளைந்ததுஇ)மழை பெய்யுமா?ஈ)அவன் மனிதன்

5)வினைமுற்றுடன் பெயர் தொடர்வது--------
அ)பெயரெச்சம் ஆ)வினையெச்சம் இ)வினைமுற்றுத்தொடர் ஈ)முற்றெச்சத்தொடர்

6)முற்றுப்பெறாத வினை,பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது----------
அ)வினைமுற்றுத்தொடர் ஆ)வினையெச்சத்தொடர் இ)முற்றெச்சம் ஈ)பெயரெச்சத்தொடர்

7)உண்டவர் உண்ண,உண்கின்ற அனைவரும் மெய்ம்மறந்து போயினர் அடிக்கோடிட்ட சொற்கள் முறையே
அ)வினையாலணையும் பெயர்,வினையெச்சம்,பெயரெச்சம்
ஆ)தொழிற்பெயர்,வினையெச்சம்,பெயரெச்சம்
இ)வினையெச்சம்,பெயரெச்சம்,வினையாலணையும் பெயர்
ஈ)பெயரெச்சம்,வினையெச்சம்,வினைத்தொகை

8)வேற்றுமைத் தொகாநிலைத் தொடரைத் தேர்வு செய்க.
அ)அன்பே வா ஆ)காவிரி பாய்ந்தது இ)பள்ளிக்குச் சென்றாள்ஈ)கேட்ட வினா

9)மற்றொருவர் என்பது -------------- தொடர்.
அ)எண்ணுப்பெயர் ஆ)இடைச்சொற்றொடர்
இ)வினையாலணையும் பெயர் ஈ)வேற்றுமைத்தொடர்

10)பெயரெச்சங்களை---------- என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதால்--------உருவாகின்றன.
அ)செய்ய,வினையெச்சம் ஆ)செய்யும்,பெயரெச்சம்

இ)செய,முற்றெச்சம் ஈ)செய,கூட்டுநிலைப்பெயரெச்சங்கள்.

11)அடுக்குத்தொடரைக் கண்டறிக.

அ)பலபல ஆ)பற்பல இ)பளபள ஈ)சல சல

12)பொழிந்த நெய்க்கண் வேவையொடு- அடிக்கோடிட்ட சொல்லுக்கான இலக்கணக்குறிப்பு

அ)இறந்தகாலப் பெயரெச்சம் ஆ)இறந்தகால வினையெச்சம்

இ)வேற்றுமைத்தொகை ஈ)உருவகம்

13)நோனாச் செரு என்பதன் இலக்கணக் குறிப்பு

அ)வேற்றுமைத்தொகை ஆ)பெயரெச்சம்

இ)ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் ஈ)எதிர்கால வினைமுற்று

14)சொல்லிசையளபெடைகளைத் தேர்ந்தெடுக்க

அ)அசைஇ,அல்கி ஆ)அசைஇ,கெழீஇ இ)கெழீஇ,அல்கி ஈ)பருஉ,அல்கி

15)வினைத்தொகையைக் கண்டறிக

அ)நன்மொழி ஆ)மற்றொன்று இ)பள்ளிசெல் ஈ)அலங்கு கழை

16)இடைச்சொல் தொடரில் இடைச்சொல்லுடன் தொடர்வது

அ)பெயர்,வினை ஆ)வினா,விடை இ)பெயர்,வினா ஈ)வினை,வினா

17)ஒரு சொல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டமுறை அடுக்கித்தொடர்வது

அ)இரட்டைகிளவிஆ)அடுக்குத்தொடர்இ)இரட்டுறமொழிதல் ஈ)உரிச்சொற்றொடர்.

**விடைகளை அறிய பின்வரும் இணைப்பைச் சொடுக்கவும்**

**இயல்-3 க்கான விடைகள்**

அ.உ.நி.பள்ளி,தலைமைப்பு..... www.Padasalai.Net